இது ஒரு புது வித அதிசயம் இன்னும் உலகம் விளங்காத ரகசியம்
இருளில் இருக்கின்ற தமிழினம் நாளை விடிவினில் வாழ்ந்திட வழிவரும் 2

இது ஒரு புது வித அதிசயம் இன்னும் உலகம் விளங்காத ரகசியம்
இது ஒரு புது வித அதிசயம்

சீருடை ஊனிடம் தமிழர்க்கு இல்லை
போரினில் சிவக்குது ஈழத்தின் எல்லை
கூறிட இடமில்லை கேட்பவர் இல்லை
குமுறினும் கண்களில் நீர்பெறவில்லை
வயிற்றினில் எப்போதும் பசிக்கோலம்
சாக் கயிற்றில் தூங்குதெங்கள் எதிர்காலம் 2

இது ஒரு புது வித அதிசயம் இன்னும் உலகம் விளங்காத ரகசியம்
இது ஒரு புது வித அதிசயம்

கண்ணையும் கட்டியே நடக்கச்சொல்கின்றார்
கல்வித்தனையிங்கே நசிக்கிகொள்கின்றார்
சோதனை நாளிலும் செல்லை அடிக்கின்றார்
சாதனை இதுவென புலம்பிக் கொள்கின்றார்
போலி போதிகளின் குணக்கோலம்
இது புமி அறியாத வினைக்கோலம் 2

இது ஒரு புது வித அதிசயம் இன்னும் உலகம் விளங்காத ரகசியம்
இது ஒரு புது வித அதிசயம்

தலைவனின் அணியிலே தாவியே பாய்வோம்
தலைநிமிர்ந்து நாங்கள் தமிழீழம் அமைப்போம்
காவிய நாயகர் வழியினை தொடர்வோம்
கல்லறை சுவடினில் காலடி பதிப்போம்
கண்களில் தெரிகின்ற எதிர்காலம்
அதை காண துடிக்குதெங்கள் நிகழ்காலம் 2

இது ஒரு புது வித அதிசயம் இன்னும் உலகம் விளங்காத ரகசியம்
இருளில் இருக்கின்ற தமிழினம் நாளை விடிவினில் வாழ்ந்திட வழிவரும் 2